பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

24 08 2024 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- யுக்ரைனில் தாம் மேற்கொண்ட பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- குடற்புழு நீக்க மாத்திரைகள் வினியோகிக்கும் திட்டத்தால் தமிழகத்தில் 2 கோடியே 69 லட்சம் பேர் பயணடைவார்கள் என மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.
- திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக அரசு சார்பில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இன்று தொடங்குகிறது.
- எல்லைதாண்டி மீன்பிடித்ததாகக் கூறி நாகை மீனவர்கள் 11 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது.
- 17 வயதுக்குபட்பட்டோருக்கான உலக மல்யுத்த போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

யுக்ரைனில் தாம் மேற்கொண்ட பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தமது யுக்ரைன் பயணம் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாக அமைந்தது என கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையே நட்புறவை வலுப்படுத்தும் வகையில் இந்தப் பயணம் அமைந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

யுக்ரைனில் அமைதி நிலவ வேண்டும் என இந்தியா விரும்புவதாகவும், விரைவில் அங்கு அமைதி ஏற்படும் என இந்தியா நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமக்கு சிறப்பான வரவேற்பை அளித்த யுக்ரைன் அரசுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

டிஜிட்டல் சுகாதார நடைமுறைகளை வலுப்படுத்த மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாக சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜேபி நட்டா கூறியுள்ளார்.

நாட்டில் அலோபதி மருத்துவர்களைப் பதிவு செய்வதற்கு தேசிய மருத்துவ ஆணையத்தின் மருத்துவப் பதிவேடு இணையதளத்தை புதுதில்லியில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், இந்தப் பதிவு நடைமுறைகள் தொடர்ச்சியாக மேம்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

தேசிய மருத்துவப் பதிவேட்டை உருவாக்குவதிலும், பராமரிப்பதிலும், பதிவு நடைமுறைகளை எளிதாக்குவதிலும் மாநிலங்களின் சுகாதாரத்துறைகளுக்கு முக்கிய பங்கு உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

துணை மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவத் துறை சார்ந்த பிற பணியாளர்களுக்காகவும் இதேபோன்ற பதிவேட்டைத் தொடங்குவதில் கவனம் செலுத்தப்படுவதாக திரு ஜேபி நட்டா தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய சுகாதாரத் துறை இணையமைச்சர் திருமதி அனுப்ரியா படேல், நாடு முழுவதும் உள்ள மருத்துவர்கள் குறித்த உண்மையான தரவுகள் அவசியமானது என்றும் அதைக் கருத்தில் கொண்டே இந்த தளம் உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய இணையமைச்சர் திரு பிரதாப்ராவ் ஜாதவ் சுகாதார அமைப்பின் மீது மக்களின் நம்பிக்கையை இது உறுதி செய்யும் என்றார்.

<<<<>>>>

குடற்புழு நீக்க மாத்திரைகள் வினியோகிக்கும் திட்டத்தால் தமிழகத்தில் 2 கோடியே 69 லட்சம் பேர் பயணடைவார்கள் என மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்குவதை சென்னையில் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், 6 மாதங்களுக்கு ஒருமுறை இந்த மாத்திரைகளை வழங்கும் வகையில் தேசிய அளவில் திட்டம் செயல்படுத்தப்படுவதாகக் கூறினார்.

தமிழகத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் இந்த மாத்திரைகளை வழங்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த மாத்திரைகளை உட்கொள்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

<<<>>>

நாகை மீனவர்கள் 11 பேர் எல்லைதாண்டி மீன்பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களது விசைப் படகு ஒன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<>>>

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் தமிழக அரசு சார்பில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு இன்று தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டிற்காக விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியார் ராஜசேகரன் தெரிவிக்கிறார்.

<<<>>>

தமிழகத்தில் பழங்குடியினரின் சமூக பொருளாதார மேம்பாட்டில் மாநில அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாக மாநில ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் கூறியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி பகுதியில் 29 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

மாநிலத்தில் 7 ஆயிரம் பழங்குடியினர் பயனடையும் வகையில் ஐந்திணை திட்டம் செயல்படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரானில் நான்கு மாகாணங்களில் 14 ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு தீவிரவாதத் தடுப்புப் படை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தாய்லாந்தின் புக்கெட் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 9 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

உருகுவே நாட்டின் தேசிய தினத்தையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் பங்கேற்று உரையாற்றினார்.

<<<<>>>>

மணிப்பூர் சென்றுள்ள ராணுவ தளபதி திரு உபேந்திர திவேதி அம்மாநிலத்தில் பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆய்வு செய்தார்.

<<<<>>>>

நாட்டில் பெண் தொழிலாளர்களின் மேம்பாடு குறித்த பணிக்குழுவின் 7வது கூட்டம் மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சகத்தின் செயலாளர் திருமதி சுமிதா தவ்ரா தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த 136 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மாநில வனத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் வழங்கினார்.

<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் சீரமைக்கப்பட்ட பாலவராயன் குளத்தை மாநில அமைச்சர் திரு தாமோ அன்பரசன் திறந்து வைத்தார்.

<<<<>>>>

திருவாரூரில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ தலைமையில் நடைபெற்றது

<<<<>>>>

கன்னியாகுமரியில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி அழகு மீனா தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

திருப்பத்தூரில், குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் நடைபெற்ற மழைநீர் சேமிப்பு விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள் நலன் தொடர்பான ஆய்வுக் கூட்டம் தேசிய தூய்மைப் பணியாளர் நல ஆணையத் தலைவர் திரு மா வெங்கடேசன் தலைமையில் சென்னை ராயபுரத்தில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

17 வயதுக்குபட்டோருக்கான உலக மல்யுத்த போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

ஜோர்டானில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்திய மகளிர் அணி 185 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

ஜப்பான் இரண்டாம் இடத்தையும், கஜகஸ்தான் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

இப்போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியா, 5 தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

ஆடவர் பிரிவில் இந்தியா 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<>>>>

அல்டிமேட் டேபிள் டென்னிஸ் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் புனே அணி – அகமதாபாத் அணியை வென்றது. மற்றொரு ஆட்டத்தில் பெங்களூரு அணி – சென்னை அணியை வென்றது.

<<<<>>>>